# ஸ்ரீ முத்துமாரியம்மன் அருட்பாக்கள்
# ஆதிசிவன் அருட்காவியம்



ஆக்கம் :
வைரமுத்து கணேசன்
சேனைக்குடியிருப்பு - 02
கல்முனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# ஸ்ரீ முத்துமாரி அம்மன் அருட்பாக்கள்

முத்தமிழுக்கதிபதியாம் முதல் தெய்வமாய் விளங்கும்
வித்தகக் கணபதியை விருப்புடனே - நித்தம்
வந்தித்து நாளும் மலரடி பணிவோர்க்கு
முத்திதரும் வித்தகன் தாழ் துணை

01. எந்த வினை வரினும் என்தாயேயென்று சொல்லி
சிந்திக்கும் மக்களுக்கு சிறந்த வரமளித்து
முத்தியும் கொடுக்கின்ற முத்துமாரி அன்னைதனை
பக்தியுடன் பணிந்தேன் பாடவரம் தாருமம்மா

02. அம்மா என்றுனை அழைப்பதற்கென்னாளும்
இம்மாநிலத்திலே என்னைநீ படைத்ததற்கு
சும்மா நானிருந்தால் சுகமொன்று மில்லையென்று
அம்மா உனை நினைத்து அருட்பாக்கள் செப்புகின்றேன்

03. செப்புகின்றேனுன் நாமம் செகமெல்லாம் போற்றுதற்கு
அப்பரிடப்பாகம் அமர்ந்து கொண்ட அம்பிகையை
எப்போதும் துதிப்போர்க்கு என்ன இடர்வந்தாலும்
தப்பாமல் காத்தருளும் தாயாரை நான் மறவேன்

04. மறவாமலுன்னை மனதில் தினம் துதித்து
துறவாமல் துறந்தார்க்கு துஷ்ட பயமகற்றி
பிறவாத முத்திப் பேரின்பப் பெருவாழ்வும்
அறம் பொருள் வீடு இன்பம் அருள்கின்ற உத்தமியே

05. உத்தமியேயிந்த உலகெலும் நீ படைத்து
காத்து ரட்சிக்கின்ற காரிகையே மாரிமுத்தே
எத்தனை தெய்வங்கள் இருந்தாலும் இவ்வுலகில்
அத்தனைக்கும் மேலான ஆரணங்கே மாரியம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. மாரியம்மாவுன் பெருமை மனமாரக் கேட்போர்க்கு
காரிய சித்தியுடன் கர்மவினை தீர்த்தருளி
பாரிய முத்தியுடன் பரமபதம் நீ கொடுத்து
வாரியணைத் தெடுக்கும் வண்ண மகள் என்தாயே

07. தாயாக நீயிருந்து தரணிவாழ் மக்கள் தனை
ஓயாது காத்தருளும் ஓங்காரி மாரிமுத்தே
சேயாகப் பக்தரெல்லாம் சென்னிமேல் கரம் கூப்பி
வாயாரவுனைத் துதித்து வணங்கினேன் மாதரசே

08. மாதரசேயிந்த மண்ணுலக மக்களெல்லாம்
ஆதரவின்றி அலைமோதும் நேரத்தில்
பாதார விந்தபதம் காட்டி பயம் நீக்கி
சாதாரணமாக தயைபுரிந்து காருமம்மா

09. காருமம்மா அன்புவைத்து கருமாரியென் தாயே
பாருமம்மா இந்தப் பார்முழுதும் அறியாமை
சீறுதம்மா தலைதூக்கி சிங்காரியுனை மறந்து
கூறவைப்பாய் உன் நாமம் குலம்வாழ்ந்தால் போதுமென்று

10. போதுமென்ற மனமே பொன்செய்யும் என்பது போல்
சூதின்றி நினைப்போர்க்கு சுகமனைத்தும் தந்தருளி
ஏதுவரம் கேட்டாலும் என்தாயே சந்தருளும்
மாதுவுமையுன் போல வையகத்தில் தெய்வமில்லை

11. தெய்வங்கள் பலவென்று செகம்முழுதும் சொன்னாலும்
மெய்யாகவுன் போல மேதினியில் தெய்வமில்லை
கையோடு கால்சோர்ந்து கண்மயங்கிப் போனபின்பு
ஐயகோ சவமென்பார் அகன்று விட்டாள் சக்தியென்று

12. சக்தி சக்தியென்று சதாகாலம் சொல்வோர்க்கு
புத்திரப் பேறும் புவிவாழ்வும் மிகப் பெற்று
இந்திரப் பதவியும் இகபர சௌபாக்கியமும்
பத்தினியே தந்தருளும் பராசக்தி அம்பிகையே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. அம்பிகை பெற்றுள்ளை அனுதினமும் மெய்யடியார்
கும்பிட்டோம் கரம்கூபி கோடி நமஸ்காரமென்று
நம்பிக்கை கொண்டோர்க்கு நாள்தோறும் பெருமகிழ்ச்சி
அம்பிகையே தந்து அருள்கின்ற நாயகியே

14. நாயகியே காக்கும் நாரணன் தங்கையுமே
சாயகியே யுன்னை சதாகாலம் தொண்டரெலாம்
பாகாய் மனமுருகி பணிவோர்க்கு என்னாளும்
ஆகாத செயலில்லை அமிர்தபரிபூரணியே

15. பூரணியே அன்றொருநாள் புரியாமல் வெள்ளையனும்
காரணியை மறந்தவனும் கல்லென்று தானினைத்து
நாரணியை இகழ்ந்து நம்பாமல் போனதற்கு
பூரணமாய் முத்தெறிந்து புரியவைத்த கண்மணியே

16. கண்மணியே பெண்மணியே கருணைதரும் பொன்மணியே
வண்ணக்கிளியே வளர்மதியே எண்ணுக்கடங்கா எழிலரசே
விண்ணவர்க் கிறைவியே மேலான செல்வமே
மன்னவர்க் கமுதமே மனம்நிறை தெய்வம் நீயே.

17. நீயே தவம் செய்து நிர்மலனை அடைவதற்கு
தீய படையழித்து திக்விஜயம் செய்கையிலே
சாயலிலே மகேஷ்வரனை சந்தித்த மாத்திரத்தில்
மாய முலை மறைய மனமகிழ்ந்த பூங்குழலே

18. பூங்குழலேயிந்தப் புவிவாழும் மக்களெல்லாம்
தாங்கொணா நோய்வந்தால் தன்னாலே உனை நினைத்து
ஏங்குகின்ற நேரத்தில் என்தாயே மனமிரங்கி
தூங்காமலோடி வந்து துணைநிற்பாய் பைங்கிளியே

19. பைங்கிளியே முன்னாளில் பரவசிவன் தன்னருகில்
பூங்கிளியே நீயும் பூரித்திருக்கையிலே
தேன்கிளியே விளையாட்டாய் தேசிகனின் கண்ணிரண்டை
வான்கிளியே மூடியதால் வந்ததம்மா பாவமென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. பாவம்தனைப்போக்க பரமனுட ஆணையினால்
தவம்செய்ய வேண்டு மென்று தாயாரே வனமேகி
தூபதீபம் காட்டி சிவனாரை அர்ச்சித்து
பாவம்தனைக் களைந்த பத்தினியே மாதாவே.

21. மாதாவேயுன்னை மதிப்போர்க்கும் துதிப்போர்க்கும்
ஏதேனும் வினைவருமுன் என்தாயே நீக்கிவைத்து
கோதையரே செல்வம் கொழிக்கின்ற வாழ்வழித்து
பாதை தனைக்காட்ட பக்கத்தில் வாருமம்மா.

22. வாருமம்மாவென்று வாயார அழைப்போர்க்கு
சீரும்சிறப்போடு சிறந்த வரம்கொடுத்து
நேரும் இடர்நீக்கி நினைவிலே நீயிருந்து
காருமம்மா ஏழைகளை கற்பகமே அற்புதமே.

23. அற்புதமே நீசெய்ய அன்போடு அடியார்கள்
சொற்பனத்தில் தோன்றி சொல்லிடுவாய் உண்மையெல்லாம்
அற்புதத்தைப் புகழ்ந்து அக்கணமே மெய்புருகி
பற்றுடனே அடியார்கள் பராசக்தி உனைத்துதிப்பார்.

24. துதிப்போரின் வினையெல்லாம் தூசிபோல் பறப்பதற்கு
அதிவேகம் தன்னில் அத்தனையும் நீக்கிவைத்து
பதியில் பெருவாழ்வும் பலபல சௌபாக்கியமும்
நதிபோல் பெருகிவர நாயகியே அருள்தாரும்.

25. அருள்வேண்டித் தினமும் ஆலயத்தில் பக்தர் குழாம்
திருவுருவேயுன்தன் திருநாமம் உச்சரித்து
உருகும்விதம் கண்டு உமையவளே மனமிரங்கி
தருவாய் வரமனைத்தும் சங்கரனார் தேவியரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதி சிவன் அருட்காவியம்

திங்கள் சடை கங்கை நதி பொங்கரவம் சூடி
கூடலைதனிலே சென்று திருநடனமாடி
மங்கைக்கு ஒருபாகம் மனமீந்து தந்து
மனமகிழ் தேனிசை மகிழ்ச்சியில் நீந்தும்
சங்கத் தமிழ் மூன்றுக்கும் தாய்தந்தையாகி
சான்றோர்கள் மறவாமல் என்னாளும் போற்றும்
அங்கை தனில் அனலேந்தும் ஆதிசிவனாரின்
அருட்பாதம் எப்போதும் மனதில் மறவேனே

மறவேனேயென்னாளும் சிவாயநம நெஞ்சில்
மலைபோல இடர்வரினும் தளரேனே அஞ்சி
திறவாத அரங்கிலே தினமாடும் கூத்தன்
தீராத நோய்பிணிக்கு மருந்தான முத்தன்
இறைவாத முனிவோர்க்கு வரமருளும் சித்தன்
இனிப்போடு துதிப்போர்க்கு அவனுமொரு பக்தன்
அறநெறியில் குறிதவறா அடியார்க்கு அருளும்
ஆதிபரமேஸ்வரர் அடியிணைகள் துணையே

துணையென்று இணைகின்ற துஸ்டரானாலும்
துயரென்ற கடலிலே முழ்காமல் காக்க
அணைகட்ட வந்திக்கு அடிமையாய் வந்து
அடிபட்டுச் சென்றாயே ஆன்மாக்கள் உய்ய
கணைதொடுகாமனை கருக்கிப் பொசுக்கி
கல்லெறி பக்தருக்கு கருணையுமீந்து
வினையிசை ராவணன் கானத்திலாழ்ந்த
விமலாவுன் அருட்பாதம் அன்போடு பணிந்தேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிந்தேனே உன்திருப்பாதார விந்தம்
பாவவினை அணுகாமல் காப்பதுன் தஞ்சம்
அணிவித்தாய் திருநீறு ஆதிமுதலென்று
அமணரையும் சமணரையும் அறிவிலிகளாக்கி
மணிபோன்ற பொன்னெழுத்தின் மகிமையுணர்த்த
மடைதிறந்த வெள்ளத்தில் எதிரேற விட்ட
துணிகந்தை கோவணத்தை விரும்பியணிகின்ற
தூயனே பாவிநான் பணிந்தேனே உன்னை

உன்னையே கதியென்று உள்ளம் நினைக்க
ஊழ்வினைகள் அணுகுமோ என்னை மயக்க
அன்னையே உமையவள் அருகினிலிருக்க
அப்பாவுன் பாதமே அடியமென் நிறைஞ்ச
என்னையே மறந்துநான் எப்போதும் துதிக்க
எருதேறு பாகனே கருதிநீ பார்த்து
பன்றிக்கு அன்று மனம் இரங்கியருள் புரிந்த
பரலோக நாதனே பணிவோர்க்குத் தலைவனே

தலைவனே சங்கார ஐங்கரன் தந்தையே
தத்துவம் காணாத தான்தோன்றிப் பொருளே
மலையரசன் மகளோடு மையலில் ஆழ்ந்திட்ட
மகேஸ்பர மூர்த்தியே மனம் நிறைதெய்வமே
கலைகளுக்கரசனே கைலைமலை வாசனே
காதல்கொண்டோருக்கு கருணை தரும் ஈசனே
தலையிலே கங்கையைத் தாங்கிய வண்ணனே
தாய் தந்தையாகிய சதாசிவ மூர்த்தியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூர்த்தியே பார்த்தீபன் பாசுபதம் வேண்டி
முயல்கின்ற காட்சியை கண்ணாலே கண்டு
பார்த்தாயோ பார்பதி என்று நீ காட்டி
பன்றியுடன் சண்டை செய்வது போல் ஓட்டி
ஆர்த்திடப் பேரொலி வில்நாண் எழுப்பி
அடிபட்டு வந்தாலும் அன்போடணைத்து
பார்த்தீபன் வேண்டிய பாசுபதம் அளித்த
பரம சிவலிங்கமே பரம் பொருமுதமே

அமுதமே பெற்றிட அலைகடல் தன்னை
அசுரரும் தேவரும் கடைகின்ற போது
உமிழ்ந்திட்ட விஷம்பொங்கி உலகெலாம்பரவ
உன்னையே கதியென்று உயிரெல்லாம் அணுக
அமிழ்தாக்கி விஷத்தையே அள்ளியேயுண்டு
ஆத்மாக்கள் தன்னோடு அகிலத்தைக் காத்து
மகிழ்ச்சியில் திளைத்திட்ட மகேஸ்பர மூர்த்தியே
மங்காத பெயர்கொண்ட திருநீல கண்டனே

திருநீல கண்டனே தில்லையில் கூத்தனே
தீராதநோய் தீர்க்கும் சிதம்பர நாதனே
மருவு கொன்றை தும்பை மாலையணிந்து
மதிக்கின்ற வயதான வேதியராகி
உருக்கமுடன் மண்ணோடு பாத்திரம்ஏந்தி
உண்மையை உலகுக்கு உணர்த்திடவேண்டி
திருநீலகண்டர்க்கு திருவருள் புரிந்த
தில்லையில் கூத்தனே திருவருட்சீலனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலனேவேலனின் தந்தையே அடிமுடி

தேடியும் காணாத தீஞ்சுடர்க் கனலே

பாலகனாய்க் கௌரிக்கு பாசம் வளர்த்து

பக்தியை உணர்த்திட்ட பாம்பணி சிவனே

நாலான வேதத்தை உடையாகக் கொண்டு

நான்மாடக் கூடலார் மதுரையைக் காத்து

தோலாசனத்திலே வீற்றிருக்கின்ற

தூயனே எப்போதும் பணிகின்றேன் உன்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Brilliant Computer Land & Printers - Kalmunai**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org